சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 83 / 2016

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **17.12.2024**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : சரவணன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

சாலை விபத்தில் இறந்துபோனவர் குளத்துப்பாளையம் ஊரைச்சேர்ந்தவர். நான் மேலசாலபாளையம். சாலைவிபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார்கொடுக்கவில்லை. மேற்படி விபத்து சம்பந்தமாக காவல் துறை விசாரணை ஆவணங்களில் என்னுடைய பெயர் வரவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் அதனால் தான் மேற்படி காவல் துறை விசாரணை ஆவணங்களில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் ஊருக்கு அருகே நான் குடியிருப்பதால் அவருக்கு ஆதரவாக பார்க்காத சம்பவத்தை பார்த்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் சாலை விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.